அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 01/2014

எனது இல. PSC /APP/03/62/2012

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,

இல. 177, நாவலை வீதி,

நாராஹேன்பிட்ட,

கொழும்பு 05.

2014 சனவரி……..ஆம் திகதி

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்களுக்கும்,

திணைக்களத் தலைவர்களுக்கும்.

**வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்கல்**

அரசாங்க சேவையில் பதவி ஒன்றுக்கு / சேவை ஒன்றுக்கு நியமனம் பெறும் அலுவலர் ஒருவர் நியமனத் திகதியிலிருந்து 03 வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலும், 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு இணங்கத் திருத்தப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்களில் அல்லது ஆட்சேர்ப்புத் திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அடுத்துள்ள உயர் வகுப்புக்கு / தரத்திற்கு பதவியுயர்வு பெற்றால், பதவியுயர்வு செயல்வலுப்பெறும் திகதியிலிருந்து 03 வருட காலப்பகுதியினுள் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலும் சித்தியெய்துதல் வேண்டும்.

02. ஆயினும், வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் உரியவாறு நடைபெறாமையினால் எழக்கூடிய நிர்வாக பிரச்சினைகளுக்கு பின்வரும் நிவாரணங்களை வழங்க அரசாங்க சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

"உரியவாறு பரீட்சைகள் நடைபெறாமையினால் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளை பூர்த்தி செய்ய இயலாமல் போன அலுவலர்களின் சேவைமுப்புக்கு பாதிப்பற்ற வகையில் நியமன/ பதவியுயர்வுத் திகதியிலிருந்து தொடராக நடாத்தப்படும் பரீட்சைகள் (04) நான்கின் மூலம் அலுவலர் ஒருவருக்கு முதலாவது/ இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய முடியும்."

03. அதற்கிணங்க, அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 06/2006 க்கு அமைவாக திருத்தப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்களில் அல்லது ஆட்சேர்ப்புத் திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறன்காண் தடைதாண்டல்கள் தொடர்பான நிவாரண வேண்டுகோள்களை 02/2011(I) இல் விதந்துரைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

ஒப்பம்: ரி.எம்.எல்.சி.சேனாரத்ன

செயலாளர்,

அரசாங்க சேவை ஆணைக்குழு.